# தூதன்

தூதன்-26 ஜூலை - ஆகஸ்ட் 2017 தூது-7

ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன் ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள். மத்தேயு 10:16

## இயேசுவின் ஊழியம் எப்பொழுதும் ஒவ்வொருவரையும் ஆயத்தப்படுத்துவதாக இருந்தது.



Private Circulation only

தென் இந்திய திருச்சபை தமிழ் சபை - துபாய்

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| ஆராதனை பாடல்கள் – ஜூலை | 13 |
| மகிழ்வும் வாழ்வும் | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| Young Reader's Column | 16 |
| Report on the JC Retreat 2017 | 18 |
| Harvest Festival Weekly Sales | 20 |
| திருச்சபை ஜெபநாள் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| சிங்கம் | 26 |
| தெரிந்து கொள்வோம் | 28 |
| Health Tips | 29 |
| Birthday Celebrants - July | 32 |
| Wedding Anniversary Celebrants - July | 35 |
| ஆராதனை பாடல்கள் – ஆகஸ்ட் | 37 |
| Birthday Celebrants - August | 38 |
| Wedding Anniversary Celebrants - August | 41 |
| Who is Cyrus | 43 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae**

# சபை போதகர் மடல்

### திருச்சபைத் திருப்பணிவிடை (Church Ministry)

“அவரே (கிறிஸ்துவே) சிலரைத் திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், வேறு சிலரை நற்செய்தியாளராகவும், ஆயர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார். திருத்தொண்டாற்ற இறைமக்களை ஆயத்தப்படுத்தவும், கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்பவும் இவர்களை அவர் ஏற்படுத்தினார்.” (எபேசியர் 4:11-13 / Ephesians 4:11-13)

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டாற்ற வந்த ஆண்டவராம் இயேசுகிறிஸ்துவின் இணையற்ற திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். இவ்வாண்டின் முதற்பகுதியைக் கடக்க இறைவன் தந்த வழிநடத்துதலுக்காக நன்றி சொல்லுவோம். இரண்டாம் பகுதியின் துவக்கத்தில், குறிப்பாக ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் விடுமுறை நாட்களைக் கழிக்கச் செல்வோருக்குப் பயண மற்றும் அனுபவ ஆசிகளையும், இங்கேயே தங்கியிருப்போருக்கு மகிழ்வு, பாதுகாப்பையும் ஆண்டவர் தந்தருள்வாராக! இவ்விரண்டு மாதங்களுக்குரிய தூதன் இதழில் “திருப்பணிவிடை” (Ministry) என்பதைக் குறித்த சில அடிப்படைத் தகவல்களைத் திருமறையின் வெளிச்சத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

### திருப்பணிவிடை - கிறிஸ்துவே முன்மாதிரி (Ministry -Christ's Model):

‘டியாக்கோனியா’ (Diakonia) என்று கிரேக்க மொழியில் அறியப்படும் ‘ஊழியம்’ அல்லது ‘திருப்பணிவிடை’ என்னும் சொல்லும், ‘லெயிற்றூர்கியோ’ (Leitourgia) என்ற ‘வழிபாடு செய்’ அல்லது ‘பணிவிடை செய்’ என்ற சொல்லும் புதிய ஏற்பாட்டில் மிகப்பிரபலமான சொற்களாகும். இவையிரண்டையும் இணைத்து நோக்கும்போது இறைவனுக்கும், இறைமக்களுக்கும் திருத்தொண்டாற்றுவதே திருப்பணிவிடை அல்லது ஊழியம் என்பதாகும். கிறிஸ்தவத் திருப்பணிவிடைக்கு அடிப்படையானது கிறிஸ்துவின் தொண்டாகும். கிறிஸ்து ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யவும், பலரை மீட்கும்படியாகத் தமது உயிரைக் கொடுக்கவும் வந்தார் (மாற்கு 10:45). தம்மை மனிதசாயலில், அடிமை உருவெடுத்து தாழ்த்தினார் (பிலி.2:7). தலைவராய் இருக்க விரும்புகிற எவரும் தொண்டராகவும், அடிமையாகவும் திருப்பணியாற்றவேண்டும் (மாற்கு 10:43) என்று அடிப்படையில் போதித்தார். ஆகவே திருத்தொண்டாற்ற வருகிற எவரும் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றுவதும், அவரது பணியாள்துவத்தை மையப்படுத்தி பணி செய்வதுமே தகுந்ததாகும் (யோவான் 13:15). Jesus Christ is the model of Christian Ministry. Anyone following his example is called to serve and not be served (Mark 10:43, John 13:15).

**திருப்பணிவிடை - கிறிஸ்தவப் பொறுப்பு (Ministry - Christian Responsibility):**

திருப்பணிவிடையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு திருச்சபைக்குரியது. பேதுரு அடிகளாரின் மடலில், அடியவர் யாவருமே "தெரிந்தெடுக்கப்பட்ட சந்ததி, அரசார்ந்த ஆசாரியக்கூட்டம், தூய இனம், அவருக்குச் சொந்த மக்கள்" (1 பேதுரு 2:9) என்று குறிப்பிடுகிறார். பழைய ஏற்பாட்டில் லேவி கோத்திரம் மாத்திரம் செய்துவந்த இத்திருப்பணி, அழைக்கப்பட்ட அனைவருக்குமுரிய பணியாகவும் விரிவாக்கப்பட்டுள்ளதைக் காணலாம். தமது குருதியாகிய திரையின் வழியாய் இயேசுகிறிஸ்துவானவர் தூய தலத்திற்குள் நுழைவதற்குரிய தைரியத்தை நமக்கு உண்டு பண்ணியிருக்கிறார் (எபி.10:19). ஆகவே இத்திருப்பணிவிடையை இரண்டு வகைகளில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அடிப்படையில் திருச்சபையினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

1.வழிபாடு: இயேசுகிறிஸ்துவின் வழியாய் கடவுளுக்கு உகந்த வேள்விகளைச் செலுத்தி (1 பேதுரு 2:5), உலகின் சார்பாக கடவுளைப் போற்றி மன்றாடி, அவருடைய பெயரை அறிக்கையிடும் உதடுகளின் கனியாகிய தோத்திர வேள்வியை எப்போதும் செலுத்த வேண்டும் (எபி.13:15). இதையே இன்னொருவருக்கு அல்லது அடுத்தவருக்கு சபையின் வழியே செய்யும் ஊழிய உதவியாகவும், கனமாகவும், தர்மமாகவும், பணிவிடையாகவும் செய்யலாம் (பிலி.2:30, 2 கொரி.9:12, ரோமர் 15:27)

2.சாட்சி: இருளிலிருந்து ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய தன்மைகளைச் சொல்லிலும், செயலிலும் அறிவிப்பதும், செயல் படுத்துவதும் திருச்சபையாரின் கடமை (1 பேதுரு 2:9). சீர்திருத்தத்தந்தை மார்ட்டின் லூத்தர் அவர்கள் குறிப்பிடுவதுபோல "கடவுளை நம்புகிற அனைவரும் ஆசாரியர்களே" என்ற அடிப்படையில் திருச்சபை தனது ஐந்நூற்றாண்டு சீர்திருத்தக் கொண்டாட்டத்தின் உச்சகட்டமாக இதை நினைவுகூர்ந்து பின்பற்றவும் அனுதின வாழ்வில் வெளிப்படுத்தவும் அழைக்கப்படுகிறது.

Ministry, moreover is a basic Christian responsibility and those who are called by God are the priesthood according 1 Pet.2:9. Through the blood of Jesus we have been given the courage to enter in to the altar for God's ministry in two different ways:

1.Worship: Which is to praise and thank God and support and honour the other people and believers in and through the church.

2.Witness: Ministry is to witness for God in the world through our word and deed in everyday life.

**திருப்பணிவிடை - கிறிஸ்துவின் அழைப்பு (Ministry - Christ's Call):** திருச்சபையினர் யாவரும் திருப்பணி செய்ய அழைக்கப்பட்டிருந்தும் ஒருசிலரை முழுநேரமாய்த் தனித்துவப்படுத்திய அழைப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. தூய பவுல் அடிகளார் திருச்சபை விரிவாக்கத்தின் வெளிச்சத்திலே எபேசு சபைக்கு எழுதுகையில், கிறிஸ்து சிலரை திருத்தூதராகவும், சிலரை இறைவாக்கினராகவும், சிலரை நற்செய்தியாளராகவும், சிலரை போதகர், மேய்ப்பராகவும் அழைக்கிறதையும் (எபே.4:11-13), தீமோத்தேயுவைத் திருப்பணிக்கு அர்ப்பணித்து எழுதுகையில் சிலரைக் கண்காணிகள் அல்லது பேராயர்கள் எனவும், சிலரை உதவிக்காரர் எனவும் அழைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டுகிறார் (1 தீமோ.3:1-12). உதவிக்காரிகளும் திருவிடைப்பணியில் இருந்த குறிப்புகளும் உள்ளன (ரோமர் 16:1). இவர்கள் பொதுநிலையினரிடமிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. Though all the believers are called to priesthood, Christ Jesus has particularly called a few to be segregated to this sacred ministry viz. Apostles, Prophets, Evangelists, Shepherds, Overseers and Deacons, deaconesses. All these categories are from the laity or from the believers of the church. (Eph. 4:11-13; 1 Tim.3:1-12).

முடிவாக, திருப்பணிவிடை இறைவனின் அழைப்பு; திருப்பணி விடையாளர்கள் இறைவனின் தெரிவு. கிறிஸ்துவின் உடலாகிய சபையை ஊன்றக் கட்டுவதற்காகவும், திருப்பணிவிடை வேலைக்கென்று புனிதர்களைப் பக்குவப்படுத்துவதற்கும் கடவுள் இக்கிருபையைத் தந்திருக்கிறார் (1 கொரி.3:10, எபே.4:12). இது வழிவழியாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. தூய ஆவியாரின் ஆற்றலோடுதான் இத்திருப்பணியைச் செய்யமுடியுமேயன்றி ஒருவரின் தனிப்பட்ட பெருமை அல்லது திறமையினால் அல்ல (1 கொரி.3:4-9). தூய ஆவியாரின் ஆலயமாக ஒவ்வொரு திருப்பணிவிடையாளரும், பற்றுமையாளரும் தம்மை வெளிப்படுத்த வேண்டும் (1 கொரி.3:16). பணிவிடையாளரின் பொதுத்தன்மை இவ்வாறிருக்க, சபைப் பணிவிடைகள் ஒரே மாதிரியாய் இராமல் வெவ்வேறு ஆவியின் வரங்களாய், பொது நன்மைக்கென்று கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் உணருவோம் (1 கொரி.12:7-28). Do ministry to build the church & society without selfishness. ஆமென்.

(குறிப்பு : 1 கொரி. 12:7 'அவனவனுடைய' என்பது 'ஒவ்வொருவருடைய' என்று புரிதல் வேண்டும்).

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

# ஆயரம்மா மடல்

## பெண் என்னும் கிரீடம் (Women The Crown)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

தாய் தந்தையாகிய கடவுளின் நாமத்தில் விடுமுறைக் காலங்களின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாயகம் சென்று வருகிறவர்களுக்கும், வெளியூர் பயணங்கள் செய்பவர்களுக்கும், இங்கேயே தங்கி இருப்பவர்களுக்கும் வேண்டிய பாதுகாப்பு, மகிழ்ச்சி, சமாதானம் போன்றவைகளைக் கர்த்தர் தந்தருள்வாராக! குடும்பத்திற்குத் தலையாய் புருஷன் இருக்கிறான் என்று திருமறை குறிப்பிட்டாலும் "ஒரு கணவனின் கிரீடம் அவன் மனைவியே" என்றும் திருமறை சுட்டிக்காட்டுகிறது. ஆகவே திருமறையில் பெண்கள் ஆண்களுடைய நிழல் மறைவில், அடுத்த நிலையில் குறிப்பிடப்பட்டாலும் பல விசுவாசமுள்ள, தைரியமுள்ள, தலைமைத்துவமுள்ள பெண்கள் சிறந்த முன்மாதிரிகளாய் நம் கண்முன் நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதையும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. திருமறையின் வரலாற்று வெளிச்சத்தில் பழைய ஏற்பாடு துவங்கி இன்றுவரை பெண்களின் சிறப்புக்குரிய சில தன்மைகளை உங்கள் நினைவிற்கு மீண்டும் கொண்டுவர இறைவன் தந்த இந்த வாய்ப்புக்காக இறைவனுக்கே நன்றி செலுத்துகிறேன்.

### 1. பழைய ஏற்பாட்டுப் பெண்கள் (Women in the Old Testament):

- ★ ஆண்களுடன் இணைந்து இறைச்சாயலாக படைக்கப்பட்டவர்கள் (ஆதி.1:26,27)
- ★ ஆண்களின் விலாவிலிருந்து படைக்கப்பட்ட பாதி (ஆதி.2:21-24)
- ★ இஸ்ரவேலின் சட்டங்கள் பெண்களை அடிமைப்படுத்த அல்ல, பெண்களின் உரிமையை பாதுகாக்க. (உபா.21:10-14, 22:13, 22:28)
- ★ கற்பிலும், வீரத்திலும், விவேகத்திலும் தலைசிறந்து விளங்கினவர்கள் (தெபோராள், எஸ்தர், மிரியாம் போன்றோர்)
- ★ தேசத்தின் வீழ்ச்சி பெண்களின் வீழ்ச்சிகளோடு ஒப்பிடப்பட்டது (எரே.7:18, புலம்பல் 1:20, எசேக்கியேல் 8:14). அதுபோல தேசத்தின் எழுச்சி பெண்களின் உயர்வு (உன்னதப்பாட்டு 1:8, நீதி.14:1,12:4)

### 2. இடைப்பட்ட காலப் பெண்கள் (Women in the inter Testament Times):

- ★ தீவிர பக்தி, நாட்டுப்பற்று, இலக்கிய நயம், ஏற்ற துணைவி என்று இணைத்திருமறையில் பெண்கள் சிறப்புடன் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.
- ★ அன்னாள், எட்னாள் (தோபித்து 1:9, 7:10,12)
- ★ சாராள் (தோபித்து 10:10, 14:13)
- ★ யூதித்து (16:1-17)
- ★ சூசன்னாள் (1 மக்கபேயர் 10:58)

## 3. புதிய ஏற்பாட்டுப் பெண்கள் (Women in the New Testament Times):

- ★ மேசியாவைத் தந்தவர் (மரியாள், மத்.1:20,21)
- ★ பக்தியுள்ள முன்மாதிரிகள் (தீர்க்கதரிசி அன்னாள், லூக்கா 2:36-38)
- ★ இயேசுவின் ஊழியத்தை ஆதரித்தவர்கள் (லூக்கா 8:1-3)
- ★ இயேசு ஆண்டவரின் குடும்பத்தார் (யோவான் 11:1-45)
- ★ இயேசுவைக் கடைசி மட்டும் பின்பற்றினவர்கள் (மத். 27:55,56)

## 4. ஆதித்திருச்சபைப் பெண்கள் (Women in the Early Church):

- ★ ஆண்களுடன் இணைந்த முதல் சீடர்கள் (அப். 1:14)
- ★ பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் (அப்.2:4)
- ★ முன்மாதிரியான விசுவாச வழிகாட்டிகள் (தொற்காள், அப்.9:36)
- ★ அநேகரை ஆண்டவரிடம் நடத்தியவர்கள் (லீதியாள், அப்.16:14,15)
- ★ உடன் ஊழியக்காரிகள் (பிரிஸ்கில்லாள், அப்.18:2)
- ★ சபை உதவிக்காரிகள்(பெபேயாள், ரோ.16:1)
- ★ பிள்ளைகளின் விசுவாச முன்மாதிரிகள் (லோவிசாள், ஐனிகேயாள் 2 தீமோ.1:5)
- ★ அப்போஸ்தலரால் பாராட்டப்பட்ட கிறிஸ்தவ அடையாளங்கள் ( 1தீமோ.3:11, தீத்து 2:3-5, 1 பேதுரு 3:1-6)
- ★ மணவாளனாகிய கிறிஸ்துவின் மணவாட்டி அடையாளங்கள் (எபே.5:21-33)
- ★ புதிய வாழ்வின் அடையாளங்கள் (வெளி.12)

இப்படியாக திருமறையின் வரலாற்றில் பல போராட்டங்களுக்கிடையே பெண்களின் தனிச் சிறப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பெண்கள் கல்வியிலும், திறமையிலும், ஒழுக்கத்திலும், பக்தியிலும், கலையிலும், சமூகப்பணிகளிலும் தம்மைக் குடும்பத்திலே, சபையிலே, சமுதாயத்திலே மற்றும் உலகமெங்கும் ஆண்களுடன் இணைந்த, இணையான அடையாளங்களாக அறியப்பட்டு உயர்த்தப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. ஆண்களும் பெண்களும் இணைந்த கூட்டுவாழ்க்கை இறைவனின் ஆசீர்வாதம். ஒருவரையொருவர் குற்றப்படுத்தாமல், மட்டம் தட்டாமல், பாராட்டி, இசைந்து வாழ்ந்து படைப்புகளையும் பேணிக்காத்து இரண்டாம் வருகையை எதிர்பார்ப்போம். பிளாஸ்டிக் உணவுகளும், தட்பவெப்பநிலை சீரழிவும் மனிதனின் பாவம் என்பதை உணர்ந்து திருந்துவோம்! சுயநலத்தை விடுத்து பொதுநன்மை தேடுவோம்!! ஆமென்.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

# உதவி போதகர் மடல்

வாக்குத்தத்த செய்தி

**நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். சங்கீதம் 32:8**

அன்புக்கும், சமாதானத்துக்கும் காரணராகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

ஒருநாள் ஹென்றி தன் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு கார் பழுதாகி நின்று கொண்டிருப்பதையும், சரிசெய்யும்படி ஒருவர் போராடிக் கொண்டிருப்பதையும் கண்டார். அதைக் கண்ட ஹென்றி, அவர் அருகில் சென்று அதைச் சரிபடுத்தினார். அப்பொழுது அதை ஏற்கனவே பழுதுபார்க்க முயன்ற மனிதன் அவரிடம், “எப்படி உன்னால் இதைச் சரிசெய்ய முடிந்தது?” எனக் கேட்டான்? அதற்கு அவர், “நான்தான் இந்தக் காரை உருவாக்கிய ஹென்றி போர்டு” என்றார்.

ஆம் பிரியமானவர்களே, நம்மைச் சிருஷ்டித்த தேவனுக்கே நம்மை எவ்வாறு நடத்தவேண்டும் என்பது தெரியும். நம்மை நாமே நடத்த முயலும்போது, அதன் முடிவு வருத்தமும், சஞ்சலமும், மரணமுமே (நீதி.14:12). அப்படியே பவுல் மூலம் வந்த தேவ நடத்துதலைத் தள்ளி, மனுஷ யோசனையினால் நடத்தப்பட்டு, கப்பலில் ரோமாபுரிக்குச் செல்ல முயன்றபோது (அப்.27:13), அதன் முடிவு வருத்தமும், சஞ்சலமுமாய் இருந்தது. மேலும் எந்த மனுஷனுக்கும் தோமாவைப்போலவே வழியும் தெரியாது (யோவான் 14:5). ஆகவே நம் வாழ்வை கர்த்தர் நடத்தவேண்டியது அவசியம். கர்த்தர் யாரையெல்லாம் நடத்துவார் என்பதை இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1.பூரணமாய் ஒப்புக்கொடுத்தவர்களை நடத்துவார்

பூரணமாய் ஒப்புக்கொடுத்தல் என்றால் எல்லா நிலைகளிலும் கர்த்தரின் சித்தம் செயல்படுத்தப்பட நம்மை அர்ப்பணிப்பதே ஆகும். இதைத்தான் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் தேவன் எதிர்பார்க்கிறார். இங்ஙனம் அர்ப்பணிக்க தேவன் அவரை நமக்கு “தம்மை யார்?” என வெளிப்படுத்துகிறார். பரிசேய முறைமையினாலும், இஸ்ரவேலின் பாரம்பரிய சட்ட ஒழுங்குகளினாலும் நடத்தப்பட்ட பவுலை தேவன் சந்தித்து தம்மை யார் என அவருக்கு வெளிப்படுத்துகிறார் (அப்.9:5).

தேவனை அறிந்த மாத்திரத்தில், அவருடைய சித்தத்தினால் தன் வாழ்வு நடத்தப்பட பவுல் அர்ப்பணித்ததைக் காண்கிறோம் (அப்.9:6, 26:19). இப்படி பூரணமாய் தங்களையே ஒப்புக்கொடுப்பவர்களை அவரே நடத்த பொறுப்புள்ளவர். அவரே அவர்களுக்காகக் கவலைப்படுபவர், தன் ஜீவனையே அவர்களுக்காகக் கொடுக்கிறவர் (யோவான் 10:10,11). தேவன் இத்தகைய ஒப்புக்கொடுத்தல் உடையோரை பாவமன்னிப்பும், விடுதலையின் வாழ்வாகிய இளைப்பாறுதலுக்குள்ளும் (அப்.13:38,39) எந்த உபத்திரவமும் கொடுக்க முடியாத சமாதானத்துக்குள்ளும் (2 கொரி.1:5) சகலவித சத்தியத்துக்குள்ளும் நடத்துகிறார்.

பூரணமாய் ஒப்புக்கொடுத்துள்ளேன் என்பதை நான் எப்படி அறியமுடியும்? நம் குணாதிசயங்களில் காணப்படும் அடையாளங்களினால் அறியலாம். எந்தச் சூழ்நிலையிலும் விசுவாசத்தை விடாது உறுதியாய் பற்றிக்கொண்டிருத்தல், என்ன நடந்தாலும் நன்றி சொல்லுதல், எத்துன்பத்திலும் சாட்சியாய் வாழ்தல் போன்ற அனுபவங்களே பூரணமாய் ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்வுக்கு அடையாளங்கள். இந்த அனைத்து அடையாளங்களும் பவுலிடம் காணப்பட்டது. தேவ நடத்துதலும் அவர் வாழ்வில் எப்போதும் இருந்தது. கர்த்தர் தம்முடைய வார்த்தை, தம்மைப் பற்றிய உபதேசங்கள், பாடல்கள், அற்புதங்கள் எனப் பல வழிகளில் தேவன் நமக்கு தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். அவரை அறிகிற அறிவினால் பூரணமாய் ஒப்புக்கொடுக்கும் அடையாளங்களால் நிரம்பின கிறிஸ்தவ வாழ்வை வாழ்வோம். உலகம் தரக்கூடாத சமாதானத்தைப் பெற்றுக்கொள்வோம்.

**2. நம்பிக்கையாயிருப்பவர்களை நடத்துவார்:** கர்த்தர் தம்முடைய வல்லமை, உண்மை, இரட்சண்யம், காருண்யம் போன்றவற்றில் நம் நம்பிக்கையை வைக்கவேண்டும் என விரும்புகிறார். அப்படி நம்பிக்கையாயிருப்பவர்களை தேவன் நடத்துகிறார். சிங்கமும், கரடியும் தன் ஆட்டைப் பட்சிக்க வரும்போது, அவைகளோடு தாவீது யுத்தம் செய்தபோது, கர்த்தருடைய இரட்சண்யத்தைக் கண்டான். அதே இரட்சண்யத்தின் மேலேயே, கோலியாத் தன்னை எதிர்த்து நின்றபோதும், தாவீது நம்பிக்கையாயிருந்தான் (1 சாமு.17:37). கர்த்தருடைய நடத்துதலான இரட்சண்யத்தின் சந்தோஷத்தை அடைந்தான்.

பவுலும் ஆசியாவில் நேரிட்ட உபத்திரவங்களில் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையின் மேலேயே நம்பிக்கையாயிருந்தான் (2 கொரி.1:8,9). அவருடைய நடத்துதலான மரணத்தினின்று தப்புவிக்கும் வல்லமையைக் கண்டான் (2 கொரி.1:10). கர்த்தரையே நம்பிக்கையாகக் கொள்வோம். நம்முடைய முகம் வெட்கமடையாதபடி காக்கும் அவருடைய நடத்துதலைப் பெறுவோம்.

**3. காத்திருப்பவர்களை நடத்துவார்:** கர்த்தர் யோசேப்புக்கு சொப்பனத்தின் மூலம், "அவன் சகோதரரெல்லாரிலும் அவனை உயர்த்துவார், அவர்கள் அவனை வணங்குவார்கள்" என்பதை வெளிப்படுத்தினார் (ஆதி.37:7). ஆனால் அது நிறைவேற பல ஆண்டுகள் சென்றது. வாழ்வின் சூழ்நிலைகளும் நேர்மாறாக இருந்தது. அப்படியிருந்தும் யோசேப்பு, தேவன் நிச்சயமாய் சொப்பனத்தின்படி நடத்துவார் என விசுவாசித்து பொறுமையாய் காத்திருந்தான். தேவன் தனக்கு அருளின சொப்பனத்தின்படி நடத்தினதைக் கண்டான்.

அப்படியே ஆபிரகாமும், தன் முதிர்வயதைக் கண்டுகொள்ளாமல், கர்த்தருடைய வாக்குத்தத்தத்தையே விசுவாசித்ததால் பொறுமையாகக் காத்திருந்தான். கர்த்தர் ஆபிரகாமை வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிக்கும்படி நடத்தினார். நம்முடைய வாழ்விலும், நம் சூழ்நிலைகளைப் பார்க்காமல், நம் பெலவீனத்தைப் பார்க்காமல், கர்த்தரையே பார்த்துப் பொறுமையோடு அமர்ந்திருப்போம். அவருடைய நடத்துதலைக் காண்போம்.

கர்த்தர் நம்மை நடத்தும்போது, அது இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். அப்படிப்பட்ட ஈவை தேவன் இம்மாதத்தில் நமக்குத் தந்தருள்வாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட். உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

ஆன்ட்ரூ தன் மகன் எரிக்கை மிகவும் நேசித்தார். எரிக் பத்து வயது நிரம்பிய சிறுவன். அவனுக்கு ஜுன் 25-ம் தேதியோடு பள்ளி நிறைவடைவதால் விடுமுறைக்கு இந்தியா செல்ல திட்மிட்டார் ஆன்ட்ரூ. ஜுலை 1-ம் தேதி குடும்பமாக இந்தியாவிற்குச் சென்றனர். அங்கே அவர்களுக்குச் சொந்தமாக ஒரு வீடும், வீட்டிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் ஒரு தோட்டமும் இருந்தது. அத்தோட்டத்தை ஆன்ட்ரூ இல்லாத வேளையில் அவனுடைய பெற்றோர்கள் கவனித்துக்கொண்டு வந்தார்கள்.

தாத்தா பாட்டியைக் கண்டவுடன் எரிக்கிற்கு மிகவும் சந்தோஷம். பாட்டி அவனுக்குத் தினமும் பண்டம் செய்து கொடுப்பார்கள். அக்கம்பக்கத்தில் உள்ள பிள்ளைகளோடு எந்நாளும் விளையாடி மகிழ்ந்தான். அந்த பிள்ளைகளில் டென்னி என்ற பத்து வயது சிறுவன் நெருங்கிய நண்பனானான். ஒருநாள் தாத்தா எரிக்கை தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். மண்ணில் குழி தோண்டி ஒவ்வொரு குழியிலும் ஒவ்வொரு விதை போட்டு லேசாக மண்ணினால் மூடக் காட்டிக் கொடுத்தார். எரிக் ஆசையோடு புதிய காரியங்களைக் கற்றுக்கொண்டான்.

பின்பு ஒருநாள் தாத்தா தன் பேரனுக்குப் பொறுப்பு வரவேண்டும் என்று அவன் கைநிறைய விதைகளைக் கொடுத்து அவற்றைத் தோட்டத்தில் விதைக்கும்படி அனுப்பி வைத்தார். தாத்தா தன்னை நம்பி பொறுப்பு கொடுத்ததால் அவனுக்கு மிகுந்த சந்தோஷம்.

பொறுமையாக விரலினால் மண்ணில் குழி தோண்டி ஒவ்வொரு குழியிலும் ஒவ்வொரு விதையைப் போட்டு மூடினான். மூன்று அல்லது நான்கு விதைகள் போட்டிருப்பான். அப்போது அவனது நண்பன் டென்னி அங்கு வந்து சேர்ந்தான். இது ரொம்ப நேரம் ஆகுமே, நான் மீன் பிடிக்கப் போகிறேன் என்று ஆசை காட்டினான். நானும் உன்னோடு வரலாம். ஆனால் தாத்தா இதைச் செய்யச் சொல்லி இருக்கிறாரே என்றான் எரிக். அதனாலென்ன? பெரிய குழி தோண்டி எல்லா விதைகளையும் போட்டு மூடிவிட்டு வா, ஜாலியாக இருக்கும் என்றான் டென்னி. எரிக்கிற்கு ஆசை தட்டியது. ஒரு குழி தோண்டி எல்லா விதைகளையும் போட்டு மூடினான். இருவரும் பாடிக்கொண்டே ஆற்றை அடைந்தனர்.

சாயங்காலம் சுமார் 6 மணியளவில் எரிக் வீடு திரும்பி தாத்தாவிடம் சென்றான். தாத்தா நீங்கள் கொடுத்த வேலையை முடித்துவிட்டேன் என்றான். Very good my grandson. மழை பெய்தவுடன் நல்ல பீன்ஸ் அறுவடை கிடைக்கும் என்றார் தாத்தா.

எரிக்கிற்கு தாத்தாவை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்ற சிந்தை அவன் இருதயத்தை வாதித்துக்கொண்டே இருந்தது. ஒருவாரமாக விட்டுவிட்டு மழை பெய்தது. தாத்தாவும் எரிக்கும் தினமும் தோட்டத்திற்குச் சென்றனர். ஒருநாள் எரிக் வேகமாகக் கத்தினான். தாத்தா தாத்தா, பீன்ஸ் முளைக்கத் தொடங்கிவிட்டது, வந்து பாருங்களேன் என்றான். தாத்தா ஓடி வந்தார். ஒன்று, இரண்டு, மூன்று.. நான்கு... அதன்பிறகு ஒரு கும்பல் முளைகள்! இது என்ன எரிக்? எரிக்கின் முகத்தைத் தாத்தா பார்த்தார். எரிக் வெட்கத்தால் தலைகுனிந்தான். தன் குற்றத்தையும், மீன் பிடிக்கச் சென்றதையும் தாத்தாவிடம் சொல்லவேண்டியதாயிற்று.

பாவத்தை அதிக நாட்கள் மூடிவைக்க முடியாது. முந்தியோ பிந்தியோ அது வெளியே வரத்தான் செய்யும். வெளிவரும் நாளில் நம்மை வெட்கித் தலைகுனியச் செய்யும். ஆகவே பாவம் செய்துவிட்டதை உணருவாயானால், உடனடியாக, யாருக்கு விரோதமாகக் குற்றம் செய்தாயோ அவர்களிடமும், தேவனிடமும் அறிக்கை செய்து மன்னிப்பை பெற்றுக்கொள்.

**வேதவாசிப்புப் பகுதி :** சங்கீதம் 32:1-5
**மனப்பாட வசனம் :** நீதிமொழிகள் 28:13

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி∴பர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## MEMORY VERSE CONTEST - 2017

**The Memory Verse Contest for the year 2017 will be conducted on 15th September 2017. Please download the memory verses (Grade wise) from our church website and make the children LEARN AND BE BLESSED.**

# செயலர் மடல்

இம்மட்டும் நமக்கு போதுமானவராக இருந்து காத்து வழிநடத்திய நம் திரியேக தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் செலுத்துகிறேன்.

02-06-2017 அன்று நம்முடைய 38வது வருடாந்தர பொதுக்குழு கூட்டம் கர்த்தருடைய பெரிதான கிருபையால் மிகவும் நன்றாக நடைபெற்றது. சபை வளர்ச்சிக்காக ஆலோசனைக் கொடுத்து தீர்மானங்கள் நிறைவேற்ற உதவிய திருச்சபை அங்கத்தினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சபை வளர்ச்சிக்காக இரண்டு வருடங்களாக உழைத்து தேவஊழியத்தை நிறைவேற்றிய முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

16-06-2017 அன்று மதுரை இராமநாதபுரம் திருமண்டலத்தின் பேராயர் Rt. Rev. Dr. M. Joseph அவர்கள் தேவ செய்தியைக் கொடுத்து ஆராதனையை சிறப்பித்தார்கள். அவர்களோடு இணைந்து அத்திருமண்டலத்தின் குருத்துவ செயலர் Rev. David Jebaraj அவர்களும் வருகை தந்தார்கள். நமது திருச்சபையின் ஸ்தோத்திர பண்டிகையை முன்னிட்டு வாராந்திர விற்பனை ஆரம்பமாகியது. Junior Church 1st Term Assessment நன்றாக நடக்க கர்த்தர் கிருபை செய்தார். நம்முடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் Junior Church பொறுப்பாளரையும், ஆசிரியர்களையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

23-06-2017 அன்று நம்முடைய திருச்சபையின் நீண்டகால உறுப்பினராக இருந்து சபையின் பொறுப்புகளில் பங்கேற்று தாயகம் திரும்பும் திரு. மனுவேல் K. மணி அவர்களுக்கும், Junior Church பொறுப்பாளராக இருந்த அவருடைய துணைவியார் திருமதி. ரேச்சல் மனுவேல் அவர்களுக்கும் பிரிவு உபச்சாரம் நடைப்பெற்றது. Junior Church புதிய பொறுப்பாளராக திருமதி. ஜெயந்தி சம்பத் அவர்களும், அவர்களோடு இணைந்து ஒருங்கிணைப்பாளர்களாகப் பணியாற்ற அர்பணித்த திரு. பால் கிஸ்ஸிங்கர், திரு. ஆல்வின் ஜெயக்குமார், திருமதி. பிரியதர்ஷினி பிரியச்சந் ஆகியோர் நமது ஆயர் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்டார்கள்.

விடுமுறையை இங்கே கழிக்கும் நமது சிறார்களுக்கு திரு. ஜூலியன் சுதர்சன் அவர்கள் பொறுப்பில் Summer Camp நடைபெறுகிறது. அவர்களோடு இணைந்து செயல்படுகிற ஆசிரியர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுமுறைக்குத் தாயகம் மற்றும் பிற இடங்களுக்கும் செல்பவர்களுக்கு தேவன் மகிழ்ச்சியையும், பாதுகாவலையும் அருள வேண்டுகிறேன். விடுமுறைக் காலங்களில் தேவனோடுள்ள ஐக்கியத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க உங்களை வேண்டுகிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Regin David | 2708 | FUJ |
| 2 | Mr. Abishek J. | 2709 | FUJ |
| 3 | Mr. Ajith Johnson | 2710 | FUJ |
| 4 | Mr. Jacob Felix | 2711 | FUJ |
| 5 | Mr. P. Barath Kumar | 2712 | FUJ |
| 6 | Mr. Albin Jayaraj Selva Raj | 2713 | RAK |
| 7 | Mr. Brightson David | 2714 | RAK |
| 8 | Mr. Edwin Stalin | 2715 | Dubai |
| 9 | Mr. P. Naveen John | 2716 | Dubai |
| 10 | Mr. Anand Chandrasekar | 2717 | Dubai |
| 11 | Mr. Harold Packiaraj Gunasekar | 2718 | Dubai |
| 12 | Mr. Noah Nitin Chander S. | 2719 | Dubai |
| 13 | Mr. Noah Santha Seelan | 2720 | Dubai |
| 14 | Mr. Emil Wilson | 2721 | Dubai |
| 15 | Mr. C. Prasanth | 2722 | RAK |

## திருமறைப் பாட ஒழுங்குகள் - ஜூலை 2017

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 07-07-2017 இறையியல் கல்வி திருநாள் | இறைமக்களைத் தகுதிப்படுத்துதல் | உபாகமம் 6:1-17 | எபேசியர் 4:7-16 | மத்தேயு 7:24-29 | 119: 89-104 |
| 14-07-2017 | இறைமக்கள்: கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் | யோசுவா 1:1-9 | 2 கொரிந். 5:16-6:10 | மாற்கு 6:7-13 | 18:1-6, 20-30 |
| 21-07-2017 | அருட்பொழிவுத் திருப்பணி: மாற்றத்திற்கான மாற்றம் | எசேக். 33:1-9 | 1 தீமோத். 3:1-13 | யோவான் 21:15-19 | 99 |
| 28-07-2017 | ஓய்வு நாள்: படைப்பின் நிறைவு | ஏசாயா 65:17-25 | எபிரெயர் 4:2-13 | மாற்கு 2:23-28 | 8 |

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 3 ஆ கர்த்தாவே, தாழ்மையாக
ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 30 அனுக்ரக வார்த்தையோடே

### 07-07-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 14 | பூலோகத்தாரே யாவரும் |
| பாமாலை | 112 | தெய்வன்புதான் மா இனிமை |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |
| கீர்த்தனை | 87 | சத்திய வேதத்தை தினம் தியானி |
| கீர்த்தனை | 134 | தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் |

### 14-07-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 44 | இயேசுவே உம்மைத் தியானித்தால் |
| கீர்த்தனை | 137 | எந்தன் ஜீவன் இயேசுவே |
| பாமாலை | 147 | அஞ்சாதிரு என் நெஞ்சமே |
| கீர்த்தனை | 182 | வீராதி வீரர் யேசு சேனை |
| கீர்த்தனை | 179 | ஜீவ வசனம் கூறுவோம் |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |

### 21-07-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 153 | ஆ என்னில் நூறுவாயும் |
| பாமாலை | 179 | பயத்தோடும் பக்தியோடும் |
| கீர்த்தனை | 140 | ஏற்றுக்கொண்டருளுமே, தேவா |
| கீர்த்தனை | 160 | உந்தன் சித்தம் போல |
| கீர்த்தனை | 162 | ஐயா உமது சித்தம் |

### 28-07-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 4 | ஆத்மமே, உன் ஆண்டவரின் |
| பாமாலை | 106 | நான் பாவிதான், ஆனாலும் |
| பாமாலை | 8 | எல்லாம் சிஷ்டித்த நமது |
| கீர்த்தனை | 7 | எந்நாளுமே துதிப்பாய் |
| கீர்த்தனை | | ஓய்வு நாளது மனமே |
| கீர்த்தனை | 148 | பாதம் ஒன்றே வேண்டும் |

# மகிழ்வும் வாழ்வும்

சந்தோசம் மனதுக்குள் சந்தேகம் வேண்டாம்
சமாதானம் தேவகுமாரன் தந்த செல்வம்
நித்தம் மலர்முகம் நட்பில் வளரும்
சுற்றம் மகிழ மகிழும் சொந்தஉளம்

பாரமில்லா ஈரமனம் நேர்முகம் காட்டிவிடும்
துக்க முகமும் துயரப் பேச்சும்
ஓரம் வளரும் வேண்டாக் களையாகும்
சிரிப்பு ஒருசுகம் சினப்போ மீள்துயரம்

செல்வ மில்லை பதவி யில்லை
சிரிப்பைத் தருவது தினமனப் பழக்கம்
சொல்லில் இனிமை இல்லை சுற்றமில்லை
தாயின் சாயலே சந்ததியில் துலங்கும்

பக்தி உள்ளம் சக்திச் சுரங்கம்
பாவம் செய்யாது கோபங் கொண்டாலும்
துக்கம் கவ்வாது சொக்கும் உறக்கம்
தக்க வைக்கும் தெளிந்த இதயம்

உண்மை ஒழுக்கம் புண்ணியம் இணைபுகழ்
அன்பு கற்பு நீதி நியாயம்
எண்ணச் சுழலின் கண்முன் தினமும்
வைத்து நடந்தால் மகிழ்வே நிகழும் !

ஆதாரம் : சங்கீதம் 4:1–8
பிலிப்பியர் 4:1–10
கவிதை எண்: 200.
ஆக்கம் : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

இயேசு அவர்களை நோக்கி, ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். யோவான் 6:35.


மானிடனின்
மனம் - இரு
நிலையாய்
இருந்து வாழ்வது
விபரீதம் விளையும்.
உதட்டில் அன்பு....
உள்ளத்தில் கசப்பு....
இருநிலை - இது
இழிநிலை.
பக்தி என்பது
மெய்யான பக்தி
பொய்யான பக்தி
இது...
இருள் நிலை
அன்பரே...
இயேசுவிடம்
உண்மையான
உறுதியான
பக்தனாக
இருக்க கஷ்டமா...
உலக சம்மந்தமான
எண்ணங்கள்
செயல்கள்
இதிலிருந்து
விடுபடவேண்டும்.
உலக உபாதைகள்
ஒருபோதும்
உங்கள்
சாந்தி நிலையை
கலக்கி
விடக்கூடாது
பரிசுத்தமாயும்
மாசற்றும்
தன்னலம்
இல்லாமலும்
ஆழ்ந்த அன்பை
அடிப்படையாகக்
கொண்ட
விசாலமான
இதயத்துடன்
இருங்கள்.
ஒருபோதும்
உங்களை
பெரியமனிதனாக்கி
பாவித்துக்
கொள்ளாதீர்.
கர்த்தருடைய
தாழ்ந்த
தொண்டனாகவே
நடந்து கொள்ளுங்கள்
எப்பொழுதும்
சேவை செய்ய
தயாராக இருங்கள்.
இது போதும்
தானாகவே வரும்
இயேசுவின்
இரட்சிப்பு எனும்
அருள் கவசம்.
பசித்து இருப்பவர்
பலருண்டு
உடல் உபாதைகளால்
அறுசுவை
உணவிருந்தும்
உண்டு மகிழ்ந்து
இருக்காதவருண்டு.
ருசிக்கு ஏற்றவாறு
புசிக்க
இயலாதவருண்டு
இதோ.. மருந்து
சீட்டைப் பிடி
விருந்து வகையை
விட்டுவிடு என
மருத்துவர்
எச்சரிக்கைக்கு
ஏற்றவாறு
வாழ்பவருண்டு
எதற்கு.. உயிர்மேல்
ஆசைகொண்டு
இவை அன்றாட
நிகழ்வுகள் தானே..
இயேசு...
ஒவ்வொரு
மனிதரிடமும்
ஜீவ அப்பமாகவும்
ஜீவாத்மாகவும்
இருந்தருள்கிறார்.
இயேசுவை
பற்றினால்
விசுவாசியானால்
அவருக்கு
பசி வந்து
பாதிப்பு வராது.
தாகம், தாகம்
என்று...
தண்ணீர் தண்ணீர்
என்று அலையும்
அவஸ்தை இல்லை
கோடையும் இல்லை
கொடுமையும் இல்லை.
எல்லாவற்றிலும்
எல்லாமாகியும்
வரம்புகள் இல்லா
வானளாவிய
வல்லமையாகவும்
எங்கும்
நிறைந்திருக்கிற
இயேசுவை
ஏற்றுக்கொள் மனமே
இனியேது பயம்
உனக்கில்லை தினமே.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## Mr. Little Faith! You are of great worth!!

"Who is this man of little faith????
He eventually became a man of strong faith
And dared to change and shape the world to a great extent.
He was the rock on which the foundation of church was built.

Yes, it's Peter. He was originally a fisherman named Simon,
One fine day, Jesus approached the fishermen calling them,
"Come, Follow me, and I will make you fishers of men........"
"Fishers of Men??? What is this new job all about????
Did Peter understand what Jesus meant???
What??? Where???? When ???? Why ????How???
He never raised such a question as these
Neither did he give any excuse
Nor did he know much about Jesus
He has never heard His teaching before,
Nor he has seen any of His miracles,




Yet he obeyed immediately, he never kept Jesus waiting ...
Nor did he run to make arrangements for his family
At once, he left his boat and nets and
Followed Jesus, wherever He went....

Is this all about true love,faith and commitment in following the Lord?
Just like Peter, most of us respond to Jesus call immediately
But as days go by, what happens to our faith and our love????
Read further to know more from Peter's life,

As days went by, Peter became one of Jesus' close friend,
Since then, He never missed being with Jesus.
He walked with Him through the deserts, mountains, cities, villages, and even dared to walk the seas like Jesus did...
"I will even die with you...." Peter assured Jesus.

That much he loved Jesus….
Yet, when Jesus was arrested, Peter was overcome by fear
In a moment's time, Peter forgot his best moments with Jesus,
Courageous Peter now became a coward,
His faith and love for Jesus disappeared in the air
Peter gave up his passionate love for Jesus by denying Jesus thrice,
He did not dare to admit his faith even to a servant girl,
Peter failed to keep His word,
Like a chocolate melting in the heat,
His beliefs and faith melted to nothing,
He failed miserably to stand firm in his faith, love and loyalty,
He who stood tall as a leader now stood ashamed of his cheap attitude,
BUT Peter now mustered up courage to come back to Jesus,
And he wept bitterly over his failure to stand firm in his faith,
Jesus gazed at him, had compassion upon him,
And gave him a new lease of life….. a honorable life
Jesus entrusted him with the responsibility , "FEED MY SHEEP"
The lowly fisherman now became a mighty fisher of men…..
Filled with the Holy Spirit, Peter spoke boldy preaching about Jesus whom he denied, He stood before a crowd of 3000 people from many countries,
And later travelled to many countries carrying the good news to the ends of the world,
He willingly suffered persecution, imprisonment, beatings and even
Rejoiced at the fact that he was worthy to suffer disgrace for the Lord's sake…for the Lord whom He hurt by denying
He who feared death had a glorious ending by dying on the cross,
"Crucify me, upside down!" he dared to request his persecutors.

Like Peter, are you struggling to hold on to your faith in times of trouble? Have you fallen back in your first love and passion to follow Jesus? Even you are of great worth like Peter,
If you have gone back in your decision to follow Jesus,
Don't lose heart! Come back to Jesus like Peter!
He will turn your shame and disgrace into victory and honor! AMEN!

# Report on the JC Retreat 2017

Theme for the Retreat: Rejoice in the Lord Always
Venue: JSS International School, Al Barsha, Dubai.

Date: 19th May, 2017.
Time: 7.00am - 4.00 pm

We began the Junior church retreat by praising and worshipping God in the church service. Our children of JC conducted the church service along with our Pastor Rev. Christopher Rathnaswamy; Songs of praises were sung by the JC kids and the teachers of JC gave a bright yellow Choral performance. CSI Malayalam Pastor gave the message and inspired the children and made the congregation to sing a beautiful song Yerigo Kottai. JC kids took the offertory.

Buses were arranged to the retreat site and breakfast was provided in the bus to all the children and teachers of JC of Dubai, Fujairah and Ras Al Khaimah Churches. As we arrived at the JSS School, children had to register themselves using the entry ticket and we had a number of 150 students from Grades 5 to Grade 12. Teachers present were 45 in number along with the other volunteers who assisted us at the retreat. We began the retreat with Praise and worship songs and this session was called as Rejoice Music Fest led by Sara Mohan and a band of teachers. Many thanks to Sara and her team of enchanting teachers. Special mention of our JC kids, Jehoash, Jenny and Mervin who entertained us with their music skills. Word of God - this session was actively done by our efficient teachers displaying their talents through their powerful message, projections and other exciting activities. Children were taught how to be happy in and with God at all times. Our Additional Pastor and Pastor Amma were there to encourage us during the devotion time.

Afternoon lunch was a big treat to all the kids as they enjoyed their bites of KFC and Pizzas and of course their favorite delight was ice- cream. Teachers had a hearty meal of very hot biriyani. Thanks to the committee members for serving us with the mouth watering and sumptuous food.

The afternoon session was a lightning competition time that kept all of us so alive and enthusiastic. Our pastor was there to guide us through this post lunch time and our Pastor Amma was also there to judge the kids during the competition. There were 7 teams with 20 and more kids in each team. Quiz Round and the Talent Round were conducted and our JC kids composed beautiful poems and enacted short skit highlighting the theme. A panel of judges, all our JC teachers sat across and enjoyed our kids display their talents.

Pastor led us through the prayer time giving the Altar Call and we could feel the Holy Spirit moving around and many kids were touched and filled with the Presence of the Lord. A memorable gift was given to each child and we finished the retreat at 4.00 p.m. Buses were arranged to get back to the Creek Park from where the parents collected the kids.

Retreat was well organized and Orchestrated by the retreat team Indra Samson, Nalini David and Latha Rajan with the guidance of the JC Superintendent Mrs. Rachel Manuel and Supervised by Jayanthi Sampath. It was a real rejoicing moment for all. Rejoice in the Lord Always and again I say rejoice.

It was true, when we are in God and with God, we will definitely Enjoy, Experience and will be Enlightened and that's why we say Rejoice in the Lord, Always.

Mrs.Nalini David

## SUMMER CAMP 2017

**The Summer Camp will be conducted for the children who are in town by our Junior Church teachers from June 23rd 2017 till August 25th 2017.**

**The director for this year is Mr. Julian Sudharsan.**

**Please send your children and receive God's blessings.**

# HARVEST FESTIVAL 2017

## WEEKLY FOOD SALES

| Date | Sponsoring group |
|---|---|
| 16-06-2017 | Youth Fellowship |
| 23-06-2017 | Womens Fellowship |
| 30-06-2017 | Deira Prayercell |
| 07-07-2017 | Executive Committee |
| 18-08-2017 | Karama - B Prayercell |
| 25-08-2017 | Mens Fellowship |
| 01-09-2017 | Sharjah - D Prayercell |
| 08-09-2017 | Sharjah - B & Ajman Prayercell |
| 15-09-2017 | Karama - A Prayercell |
| 22-09-2017 | Sharjah - A Prayercell |
| 29-09-2017 | International City Prayercell |
| 06-10-2017 | Bur Dubai Prayercell |
| 13-10-2017 | Qusais - A Prayercell |
| 20-10-2017 | Sharjah - C Prayercell |
| 27-10-2017 | Qusais - B Prayercell |
| 03-11-2017 | Junior Church |
| 10-11-2017 | Satwa - Jebal Ali Prayercell |
| 17-11-2017 | **Harvest Festival - Dubai** |

# MEMORY VERSE CONTEST - 2017

**The Memory Verse Contest for the year 2017 will be conducted on 15th September 2017. Please download the memory verses (Grade wise) from our church website and make the children LEARN AND BE BLESSED.**

# SUMMER CAMP 2017

**The Summer Camp will be conducted for the children who are in town by our Junior Church teachers from June 23rd 2017 till August 25th 2017. The director for this year is Mr. Julian Sudharsan. Please send your children and receive God's blessings.**

# NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Joshua Nathaniel

S/o.Mr.Prabhu Thomas Gnanamuthu & Mrs.Persis Suganthi

11-06-2016

# வாழ்த்துகிறோம்

"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"

கர்த்தருடைய கிருபையால் ஜுன் மாதம் 10-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Sam Rohit Edwin & Mrs.Josephine Sunitha
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# திருச்சபை ஜெபநாள் 02-07-2017 & 06-08-2017

"கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன்." சங்கீதம் 26:8

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- வருடாந்திர பேரவைக்கூட்டம் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக

- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- விடுமுறைக்காக தாயகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும் சபையார் யாவருடைய பிரயாண ஒழுங்குகளுக்காக ஜெபிப்போம்.
- விடுமுறை நாட்களில் Summer Camp சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்
- உயர்கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்பட ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.

"கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு,
எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்." சங்கீதம் 27:7

